Deposition of Witness for : PW-1
Date : 26/09/2023
Case No. : **O.S. 41/2021**
Nationality : Indian
Name : பன்னீர்செல்வம்
Religion :
Father's/Husband's Name : ரெங்கநாதன்
Age : 70
Village :
Taluk :

<u>வா.சா.1</u>

சாட்சி சத்திய பிராமாணம் செய்து விசாரிக்கபடுகிறார்.

**பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

**1.** எனது சகோதரர் சுந்தரேசனுக்கு நான் கொடுத்த பொது அதிகார ஆவணத்தின் அடிப்படையில் அவர் சொத்துக்களை கிரையம் கொடுத்தார் என்றால் நான் கிரையம் கொடுப்பதற்கு அதிகாரம் கொடுக்கவில்லை, சொத்துக்களை பராமரிப்பதற்கு தான் அதிகாரம் கொடுத்தேன். நான் எனது சகோதரர் சுந்தரேசனுக்கு சிறப்பு அதிகாரம் மட்டுமே வழங்கினேன் என்றாலும், பொது அதிகாரம் வழங்கவில்லை என்றாலும் சரிதான். வா.சா.ஆ.8 ஆவணம் தான் நான் கொடுத்த அதிகார ஆவணம் என்றால் சரிதான். மேற்படி வா.சா.ஆ.8 ஆவணத்தில் பொது அதிகார ஆவணம் என்று குறிப்பிட்டு தான் எழுதி கொடுத்துள்ளேன் என்றால் பொது அதிகார ஆவணம் தான் ஆனால் அதை சொத்தை பராமரிப்பு செய்வதற்குதான் எழுதி கொடுத்தேன். மேற்படி வா.சா.ஆ.8 ஆவணத்தில் சுந்தரேசன் எனது பெயரில் சொத்துக்கள் வாங்கி கொள்ளலாம் என்றும், பட்டா வாங்கி கொள்ளலாம் என்றும், வழக்கு நடத்தி கொள்ளலாம் என்றும், தஸ்தா வஜ்களில் கையொப்பம் செய்யலாம் என்றும் சொல்லப்பட்டுள்ளது என்றால் எனது பெயரில் வாங்குவதற்காக மட்டுமே அந்த அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளது.

2. வா.சா.ஆ.8 ஆவணம் தற்போது நடைமுறையில் உள்ளதா என்றால் அது ரத்து செய்யப்பட்டு விட்டது. என்ன காரணத்திற்காக ரத்து செய்யப்பட்டது என்றால் சொத்துக்களை பராமரிப்பு செய்வதற்கு நான் கொடுத்த பணத்திற்கு சரியாக கணக்கு காட்டாததால் ரத்து செய்தேன். வா.சா.ஆ.8 ஐ ரத்து செய்த ரத்து பத்திரத்தில் மேற்படி காரணத்தை குறிப்பிட்டு உள்ளேனா என்றால் குறிப்பிட்டு உள்ளேன். வா.சா.ஆ.8 ஆவணத்தை ரத்து செய்வது குறித்து எனது சகோதரருக்கு அறிவிப்பு ஏதும் அனுப்பி உள்ளேனா என்றால் அனுப்பி உள்ளேன். அந்த அறிவிப்பின் நகலை நீதிமன்றத்தில் தாக்கல் செய்து உள்ளேனா என்றால் வழக்கறிஞரிடம் கொடுத்துள்ளேன். இவ்வழக்கில் 1ம் பிரதிவாதி சுந்தரேசன் எதிர் வழக்கினை தாக்கல் செய்துள்ளார் என்றால் சரிதான். அதனை நான் படித்து பார்த்தேன். எதிர் வழக்குரையில் 27/12/2020 ம் தேதியில் அறிவரசு என்பவரிடம் கிரைய ஒப்பந்தம் செய்து ரூ.50,00,000/-பெற்று என்னிடம் கொடுத்ததாக சொல்லியுள்ளரா என்றால் சொல்லி உள்ளார். கிரைய ஒப்பந்தம் பற்றி எனக்கு தெரியாது. நான் பணம் எதுவும் பெற்றுக்கொள்ளவில்லை.

3. மேற்படி எதிர்வழக்குரை 09/12/2021ம் தேதி தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். இதுவரை எனது சகோதரர் சுந்தரேசன் அறிவரசு என்பவரிடம் கிரையம் செய்தது மோசடி என்பதற்கு சட்டப்படியான நடவடிக்கை எடுத்து ள்ளேனா என்றால் இந்த வழக்கு தாக்கல் செய்ததால் நான் தனியாக நடவடிக்கை எதுவும் எடுக்கவில்லை. இவ்வழக்கில் அறிவரசு என்பவரை தரப்பினராக சேர்க்க நடவடிக்கை எடுத்தேனா என்றால் ஆவணம் போர்ஜரியாக ஏற்படுத்தப்பட்டது என்பதால் நடவடிக்கை எடுக்கவில்லை. 27/12/2020 ம் தேதியில் அறிவரசு என்பவரிடம் செய்யப்பட்ட கிரைய ஒப்பந்தம் எனது அனுமதியின் பெயரில் தான் செய்யப்பட்டது என்றாலும், அதனால் தான் மேற்படி ஆவணம் குறித்து காவல் துறையில் நான் எவ்வித புகாரும் அளிக்கவில்லை என்றாலும் சரியல்ல. தாவா சொத்தின்

சுவாதீனம் 27/12/2020 ம் தேதி முதல் அறிவரசுவின் சுவாதீனத்தில் இருந்து வருகிறது என்றால் சரியல்ல. எனது சுவாதீனத்தில் தான் இருந்து வருகிறது.

4. தாவா சொத்தின் சுவாதீனம் என்னிடம் இல்லை என்றால் சரியல்ல நான் தான் பராமரித்து வருகிறேன். தாவா சொத்தினை அதிக விலைக்கு விற்க வேண்டும் என்பதற்காக தான் எனக்கு அனுபவமும், சுவாதீனமும் இல்லாத தாவா சொத்தை பொறுத்து வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. 2, 3 பிரதிவாதிகளை இவ்வழக்கில் எதற்காக சேர்த்துள்ளேன் என்றால் தாவா சொத்தில் பிரச்சனை செய்ததால் சேர்த்துள்ளேன். 2, 3 பிரதிவாதிகள் தாவா சொத்தில் பிரச்சனை செய்ததாக வழக்குரையில் சொல்லியுள்ளேனா என்றால் காவல் நிலையத்தில் புகார் அளித்துள்ளேன். 2, 3 பிரதிவாதிகள் மீது எந்த தேதியில் புகார் அளித்தேன் என்றால் 25/01/2021 ம் தேதி புகார் அளித்தேன். அதன் பிறகு 10/04/2021 ம் தேதி புகார் அளித்தேன் . மேற்படி புகார்களை நான் நடவு செய்யும் போது பிரச்சனை செய்ததாக கொடுத்தேன். 3 வதாக 15/04/2021 ம் தேதி தாவா சொத்தில் உள்ள மரங்களை வெட்டியதற்காக புகார் அளித்தேன். மேற்படி புகார்களின் பெயரில் வழக்கு எதுவும் பதிவு செய்யப்பட்டதா என்றால் காவல் துறையினரால் நடவடிக்கை எதுவும் எடுக்கப்படவில்லை.

5. வெட்டப்பட்ட மரங்கள் யாரிடம் உள்ளது என்றால் பிரதிவாதிகள் எடுத்து சென்றுவிட்டார்கள். காவல் துறையினர் நடவடிக்கை எடுக்காதது குறித்து நான் நீதிமன்றத்தில் கிரிமனல் புகார் எதுவும் கொடுத்தேனா என்றால் இல்லை. நான் சொல்வது போல மரங்கள் எதுவும் வெட்டப்படவில்லை என்றாலும், தாவா சொத்து அறிவரசுவின் சுவாதீனத்தில் இருந்து வரும் காரணத்தினால் அவ்வாறு எதுவும் நடக்கவில்லை என்றாலும் சரியல்ல. தாவா சொத்து என்னுடைய சுவாதினத்தில் தான் இருந்து வருகிறது.

தாவா சொத்தின் நேரடி சுவாதீனம் எந்த ஆண்டிலிருந்து என்னிடம் இருந்து வருகிறது என்றால் 1996 ம் ஆண்டு முதல் இருந்து வருகிறது. என்ன சாகுபடி செய்து வருகிறேன் என்றால் நெல், வாழை, கரும்பு மற்றும் பருத்தி சாகுபடி செய்து வருகிறேன். தற்போது வரை சாகுபடியில் உள்ளது என்றால் சாகுபடியில் உள்ளது.

6. சாகுபடி செய்து வருவதற்கு பயிர் காப்பிடு உள்ளது என்றால் உண்டு. பயிர் காப்பிடு 2000 ம் ஆண்டு முதல் நான் செலுத்தி வருகிறேன். பயிர் காப்பிடு ரசீது எதுவும் இவ்வழக்கில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. நெல்லை யாரிடம் விற்பனை செய்வேன் என்றால் தனியாரிடம் விற்பனை செய்வேன். அதற்கு வரவு ரசீது உள்ளதா என்றால் தனியாரிடம் விற்பதால் வரவு ரசீது எதுவும் இல்லை. எந்த தனிநபரிடம் நான் நெல்லை விற்பனை செய்தேன் என்றால் பெயர் குறிப்பிட்டு சொல்லமுடியாது. நான் சொல்வது போல நான் தாவா சொத்திற்கு பயிர் காப்பிடு எதுவும் செய்யவில்லை என்றாலும், நெல்லை தனியாரிடம் நான் விற்பனை செய்ததது கிடையாது என்றாலும், நான் தாவா சொத்தினை சாகுபடி செய்யவில்லை என்றாலும் சரியல்ல. நான் எனது முதல் விசாரணையில் 1972 முதல் 2017 வரை நான் வெளிநாட்டில் இருந்ததால் தாவா சொத்தினை நிர்வகிக்க 1ம் பிரதிவாதிக்கு பொது அதிகார ஆவணம் எழுதி கொடுத்துள்ளேன் என்று சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன்.

7. தாவா சொத்தில் நான் சுவாதீனத்தில் இல்லை என்பதை ஒப்புக்கொண்டுள்ளேன் என்றால் சரியல்ல. எனது மனைவி தாவா சொத்தினை பார்த்து வந்தார். மாலை 04.00 மணிக்கு மேல் சம்பளம் கொடுப்பதற்காக மேற்படி பொது அதிகார ஆவணத்தை எழுதி கொடுத்தேன். நெல் விற்பனை செய்ததது, விவசாய சாகுபடி பலனை அடைந்து கொண்டது நாங்கள் தான் என்றால் சரிதான். தாவா சொத்தை பொறுத்து எனது சகோதரருக்கு பொது

அதிகார ஆவணம் எழுதி கொடுத்து அதனடிப்படையில் கடந்த 2020 ம் ஆண்டு அறிவரசு என்பவரிடன் சொத்தின் சுவாதீனம் அவரிடம் ஒப்படைக்கப்பட்டதால் சொத்தின் சுவாதீனம் அறிவரசுவிடம் உள்ளதா என்றால் சரியல்ல. அந்த விவரம் எனக்கு முழுமையாக தெரிந்தும் நான் பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்னறால் சரியல்ல.

**மறுவிசாரணை** இல்லை

x

Taken down by Typed to my dictation
in Open Court read over to the witness
admitted and acknowledged by
him/her to be correct.

N SIVAPALANI Digitally signed by N SIVAPALANI

District Munsif cum Judicial Magistrate,
Thiruvidaimarudur.